# காலாண்டுத்தேர்வு மாதிரிவினாத்தாள் --- 2 ( 2018 )

( Based on New Official Model Question Paper Pattern )

## மேல்நிலை முதலாம் ஆண்டு

## வணிகவியல்

நேரம் : 2.30 மணி மதிப்பெண் : 90

### பகுதி ---- I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20 × 1 = 20

1. அர்த்தசாத்திரம் என்ற புத்தகத்தை எழுதியவர் ------------
   அ. கௌடில்யர் ஆ. சாணக்கியா இ. திருவள்ளுவர்
2. வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த வெளிநாட்டவர்கள் -------- எனஅழைக்கப்பட்டனர்.
   அ. யவனர்கள் ஆ. ஜானகர் இ. பால்பன்
3. இலாபம் ஈட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் ------- நடவடிக்கைகள் ஆகும்.
   அ. பொருளாதார சார்பற்ற ஆ. பொருளாதார இ. வணிகம்
4. கீழ்க்கண்டவற்றில் எது பழமையானவியாபார அமைப்பு வடிவம்?
   அ. தனியாள்வணிகம் ஆ. கூட்டாண்மை இ. கூட்டுறவு சங்கம்
5. கூட்டாண்மைய ---------- பதிவு செய்யலாம்.
   அ. நிறுமப் பதிவாளர் ஆ. கூடட்டுறவு பதிவாளர் இ. கூட்டாண்மை பதிவாளர்
6. ஒரு நாட்டின் அரசலோ, அரசிடமோ வழங்கப்பட்ட சாசனத்தின் விளைவாக உருவாக்கப்படும் நிறுமங்கள் ______ எனப்படும்.
   அ. பட்டய (அ) சாசன நிறுமங்கள் ஆ. சட்முறை நிறுமங்கள் இ. பதிவு செய்யப்பட்ட நிறுமங்கள்
7. பங்குதாரரின் பொறுப்பு ------------
   அ. வரையறுக்கப்படாதது ஆ. வரையறுக்கப்பட்டது இ. பங்குகளுக்கு ஏற்ப வரையறுக்கப்பட்டது
8. நுகர்வோர் கூட்டுறவு ---------நாட்டில் முதன் முதலாக வெற்றிப்பெற்றது
   அ. இந்தியா ஆ. அமெரிக்கா இ. இங்கிலாந்து
9. கோகோ கோலா -------- நிறுவனத்திற்கு உதாரணம்
   அ. பன்னாட்டு நிறுமம் ஆ. அரசு நிறுமம் இ. இணை நிறுமம்
10. ஒரு அரசாங்க நிறுவனம் எதன் பெயரில் பங்குகளை வாங்குகிறது?
    அ. பிரதமர் ஆ. குடியரசுத் தலைவர் இ. இந்தியத் தலைமை நீதிபதி
11. வங்கியர்கள் பணத்தை கையாள்பவர்கள் மட்டுமல்ல, _________ க்கு வழிகாட்டுபவர் களாகவும் இருக்கிறார்கள்
    அ. பொருளாதார வளர்ச்சி ஆ. வர்த்தக வளர்ச்சி இ. தொழில் வளர்ச்சி
12. கீழ்க்கண்டவற்றில் எது தொழிற்துறை வங்கி அல்ல?
    அ. ICICI ஆ. HSBC இ. SIDBI
13. மின்னணு வங்கியினை ----------- மூலம் செயல்படுத்தலாம்.
    அ. கணினிகள் ஆ. ATM இ. மேற்கண்ட இரண்டும்
14. மத்திய பண்டக காப்பக கழகம் (CWC) நிறுவப்பட்ட ஆண்டு --------------
    அ. 1937 ஆ.1947 இ. 1957



15. பழங்கள், காய்கறிகள் போன்ற அழுகக்கூடிய பொருட்களை சேமிப்பிக்க எத்தகைய பண்டக காப்பகங்கள் உதவிப் புரிகின்றன?
    அ. பொது பண்டககாப்பகம் ஆ. சிறப்பு பொருள் பண்டககாப்பகம் இ. குளிர்பதன பண்டக காப்பகம்
16. பெயர்ச்சியலின் முக்கிய நன்மை ----------
    அ. இலாபம் ஈட்டுதல் ஆ. செலவுகளை குறைத்தல் இ. உற்பத்திமேம்பாடு
17. பிவருவனவற்றில் எவை தவறான கூற்று?
    அ. கூட்டுறவு சங்கங்களில் யார் வேண்டுமானாலும் உறுப்பினர் ஆகலாம்.
    ஆ. எளிமையான தோற்றுவிப்பு
    இ. இதன் கோட்பாடு " ஒருபங்கு ஒருவாக்கு"
18. எந்த ஒரு நபர் பொருள்களையும், வாடைக்காக பாரபட்சமின்றி ஏற்றிச் செல்லும் வியாபாரத்தில் ஈடுபடுபவரை ---------- என்று அழைக்கலாம்.
    அ. தனிச் சரக்கேற்றிகள் ஆ. பொதுச் சரக்கேற்றிகள் இ. ஒப்பந்ததாரர்.
19. முடிவுற்ற பொறுட்களை முற்றுப் பெற்ற பொருளாக மாற்றப்படும் தொழிற்சாலை --------
    அ. பிரித்தெடுக்கும் தொழிற்சாலை ஆ. கட்டுமான தொழிற்சாலை
    இ. ஒன்று திரட்டும் உற்பத்தித் தொழிற்சாலை
20. ஒப்பந்தம், பதிவு போன்றவை ---------- அமைப்பிற்கு அவசியமில்லை.
    அ. தனியாள் வணிகம் ஆ. கூட்டாண்மை இ. கூட்டுப் பங்கு

### பகுதி --- II

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 21- க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 2 = 14

21. வாடிக்கையாளர்களுடன் நேடித் தொடர்பு கொள்வதால், தனியாள் வணிகர் அடையும் பயன் யாது?
22. பாண்டியர் ஆட்சிக் காலத்தில் தாமிரம், துணி, உப்பு, பூக்கள், சந்தனம், மீன், நெல், தானியங்கள், முத்துக்கள் போன்ற பொருள்களை விற்கும் இடத்தினை என்னவென்று அழைத்தனர்? விற்பனை பகலில் நடந்ததை எவ்வாறு சொல்லப்பட்டது?
23. இந்துச் சட்டத்தின் இரணடு பிரிவுகள் யாவை?
24. இந்து கூட்டு குடும்ப தலைவரை மேலாளர் என அழைக்க காரணம் யாது?
25. தகவலறிக்கை என்றால் என்ன?
26. ஒரு பிடிப்பு நிறுமம் , எத்தனை துணை நிறுமங்களை நிர்வகிக்கலாம்? பிடிப்பு நிறுமம் பொருள் தருக
27. கூட்டுறவு வரையறு.
28. திரு. கார்த்திக் என்பவர் நாள்தோறும் மாலை வேளைகளில் குல்பி ஐஸ்கிரீம் விற்பனை செய்வார்.
    அ) இதில் கூறப்பட்டுள்ள படி, அவர் எந்த பொருளாதார செயல்பாட்டில் ஈடுபட்டுள்ளார்?
    ஆ) அதன் பொருளை எழுதுக.
29. அரசு நிறுமம் என்றால் என்ன?
30. வழங்கல் ஆணை என்றால் என்ன?

### பகுதி --- III

B.BALAJI , PG ASST IN COMMERCE, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 31- க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 3 = 21

31. புற திறனீட்டல் வரையறுக்க
32. பண்டக சான்றாணை மற்றும் பண்டக இரசீது இடையே மூன்று வேறுபடுகளை கூறுக
33. உண்மைநேர மொத்தத் தீர்வக அமைப்பு பற்றி ஒரு குறுகிய குறிப்பு எழுதுக.
34. வெளிநாட்டு வங்கிகள் என்றால் என்ன? எ.கா தருக
35. ஒரு ஆளுநர் மற்றும் நான்கு துணைநிலை ஆளுநர்கள், நான்கு ஆண்டுகளுக்கு பதவி வகிக்கும் வகையில் இந்திய ரிசர்வ் வங்கியின் நிர்வாகத்தில் நியமிக்கப் படுவார்கள். இவ்வாறு, இந்திய ரிசர்வ் வங்கியின் நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள மற்ற நபர்கள் யார்?
36. கூட்டுறவு சங்கத்திற்கு எடுத்துக்காட்டுகள் தருக
37. கூட்டாண்மை நிறுவனத்தைப் பதிவு செய்ய பின்பற்றப்படும் நடைமுறைகளை விவரி. ( ஏதேனும் ஆறு )
38. தனிநபர், தன்னுடைய சுய தேவைக்காக துணியை நெய்தல் என்பது தொழில் செயல்பாடு ஆகாது. ஏன்?
39. உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் அனைத்தும், உற்பத்தியாகும் இடத்திலேயே விற்பனை செய்யப்படுகின்றனவா? பொருட்களை வைத்திருந்து விற்பனை செய்வதற்கு உறுதுணையாக இருப்பது எது?
40. அயல் நாட்டு நிறுமம் என்றால் என்ன?

## பகுதி --- IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 × 5 = 35

41. பண்டங்கள் மற்றும் பணிகள் பரிமாற்றத்தினூடே ஏற்படும் தடைகளும்,இடையூறுகளும் எவை என்பதனை பட்டியலிட்டு, அதில் ஏதேனும் நான்கினை விவரி

( அல்லது )

உற்பத்தித் தொழில்களின் வகைகளை அதன் நடவடிக்கைகளின் அடிப்படையில் விவரி.

42. கூட்டுறவு சங்கத்தின் நன்மைகள் யாவை?

( அல்லது )

திரு. சண்முகம் என்பவர் ஒரு இதய நோயாளி. ஆனால் அவர் எல்.ஐ.சி. நிறுவனத்தில் தனக்கு ஆயுள்காப்பீட்டுறுதி திட்டாணவம் எடுக்கும்போது, இந்த உண்மையை மறைத்து விட்டார். அவர் மாரடைப்பால் மரணமடைந்த போது, எல்.ஐ.சி. நிறுவனம் இறந்தவரின் சட்டபூர்வ வாரிசுக்கு இழப்பீடு வழங்கமறுத்து விட்டது. ஏனெனில் திரு. சண்முகம் கருப்பொருள் குறித்த உண்மையை ( தனக்கு இருதயநோய் இருக்கிறது என்ற உண்மையை ) தெரிவிக்காத தேகாரணம்.

அ) இது எத்தகைய காப்பீட்டின் கோட்பாடு ஆகும்?
ஆ) மேற்கண்ட காப்பீட்டின் கோட்பாட்டினைத் தவிர, வேறு நான்கு காப்பீட்டின் கோட்பாட்டினை விவரி.

43. பல்வேறு வகையான பண்டக காப்பாகங்கள் யாவை?

( அல்லது )

கூட்டாளிகளின் வகைகளில் ஐந்தினை விவரி.

44. பன்னாட்டு நிறுவனத்திற்கு இலக்கணம் தந்து, அதன் நன்மைகளில் நான்கினை எழுதுக.

(அல்லது )



பொதுக் கழகத்தின் நன்மைகளில் இரண்டு, தீமைகளில் மூன்று - விவரி

45. இந்திய ரிசர்வ் வங்கியின் நிறுவனக் கட்டமைப்பு பற்றி விரிவாக விளக்குக.

( அல்லது )

சிறுகுறிப்பு வரைக : 1. பண்டக சான்றாணை 2. பண்டக காப்பாளர் இரசீது 3. துறைமுக இரசீது 4. வழங்கல் ஆணை 5. தமிழ்நாடு பண்டக காப்பக கழகங்கள்

46. புற ஒப்படைப்பின் நன்மைகளை விவரிக்க.

( அல்லது )

ஒவ்வொரு கூட்டாளியும் தனது தவறான நடவடிக்கைகளால் ஏற்படும் நட்டத்தையும், வியாபாரத்தில் தன்னால் ஏற்படுகின்ற இழப்புகளையும் ஈடுசெய்யும் கடமை உள்ளதா? இது தவிர, வேறு என்ன கடமைகள் கூட்டாளிகளுக்கு உள்ளது?

47. கூட்டாண்மையைப் பதிவு செய்யாவிடில் ஏற்படும் விளைவுகள் யாது?

( அல்லது )

"தொழில் என்பது பொருள்களை வாங்கி விற்பதன் மூலம் செல்வம் சேர்க்கும் மனித நடவடிக்கை ஆகும்" - 1. இது யாருடைய கூற்று? 2. அதன் சிறப்பியில்புகள் இரண்டை கூறுக 3. அதன் நோக்கங்கள் இரண்டினை எழுதுக.

B.BALAJI , PG ASST IN COMMERCE, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613